விவசாயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். விவசாயத்தில் அதிக மாக உற்பத்தி செய்யவேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொள் கிறோம். வருஷத்தில் நூறு கோடிக்கு மேல் வெளிநாடுகளி லிருந்து உணவு வரவழைத்து ஆயிரம் கோடி ரூபாய் வரை கடன் வாங்கி நாம் ஏதாவது நல்ல சாமான் வாங்க வேண்டுமென்றால், இது வாங்க வேண்டாம், அது வாங்க வேண்டாம் என்று கடன் கொடுத்தவர்கள் சொல்லக்கூடிய முறையில் வந்திருக்கிறது. உணவு இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. மூலப் பொருள் அவசியம் வேண்டியிருக்கிறது. எல்லா இடங்களிலும் தகுந்த மிஷின்கள் வைத்து அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று பெரிய கைத் தொழில்கள் ஏற்படுத்தி வருகிறோம். அதற்கும் மூலப்பொருள் கள் வேண்டும். விவசாயத்தில் அதிகப் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தில் வேலை நடந்துவருகிறது. அது எப்படி நடக்கிறது என்று பார்க்கவேண்டியது அவசியம். சாதாரணமாக விவசாயிகளுக்குப் பரிசு கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். 6,000, 8,000, 10,000 ராத்தல் என்று நெல்லை உற்பத்தி செய்கிறவர்களுக்குப் பரிசு கொடுப்பதாகச் சொல் கிறார்கள். எவ்வளவு உற்பத்தி செய்ய முடியும்? சப்ளை அண்டு டிமாண்டு என்பது நிலத்திற்கும் பொருந்தும். மனிதனுக்கு உள்ளதுபோலத்தான் எவ்வளவு தீனி போட்டாலும் எவ்வளவு வாங்குமோ அவ்வளவு தான் வாங்கும். 8,000 ராத்தல் உற்பத்தி என்று சொல்கிறார்கள். அதை யோசிக்கவேண்டும். அதில் பரிசும் கொடுக்கப்படுகிறது. 8,000 ராத்தல் என்றால் எவ்வளவு? தஞ்சாவூர் கலத்தில் 133 கலம். ஒரு ஏக்கரில் இவ்வளவு விளையுமா? ஒரு போகத்தில் 55½ மூட்டைகள் விளையுமா? 6,000 ராத்தல் விளையாது. கவர்ன்மெண்ட் பாரம்கள் இருக்கின்றன. அவர்களுக்கு நல்ல டெக்னிகல் எஜுகேஷன் இருக்கிறது. டிரஷரியில் பணம் இருக்கிறது. நினைத்தபோது எடுத்து நினைத்த படி செலவு செய்யலாம். அவர்கள் அவ்வளவு வசதிகளைப் பெற்றிருக்கும்போது காட்டுகின்ற உற்பத்தி 4,500 ராத்தலுக்கு மேல் கிடையாது. 8,000, 10,000 என்று சொல்லிக் கொண்டிருப்பது ஏன்? நானும் பத்து, பன்னிரண்டு ஆண்டுகளாகப் பேசாமல்தான் இருந்தேன். என்னால் பொறுக்க முடியவில்லை. கீழேயிருந்து மேல்வரையில் கதிர் விட்டிருந்தாலும் எவ்வளவு உற்பத்தி செய்ய முடியும்? அவ்வளவு வராது. சாதாரண விவசாயிகளைப் பிடித்து அவ்வளவு உற்பத்தி செய்யவேண்டுமென்று கேட்பவர்கள் அரசாங்க ஊழியர்கள் தங்கள் பாரங்களில் ஏன் உற்பத்தி செய்து காட்டக்கூடாது? எல்லா வசதிகள் இருந்தும் ஏன் அதைக் காட்ட முடியவில்லை? சாமானுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டுமே என்றுதான். அப்போது அவர்கள் கையைப் பிடிக்கும். ஆகையால்

3rd July 1962] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

அதைக் கவனிக்கவேண்டும். மத்திய அரசாங்கம் கூட 12,500 ராத்தலுக்கு சேலத்தில் ஒருவருக்கும் பரிசு கொடுத்திருக்கிறார்கள். வருஷா வருஷம் இது நடந்துகொண்டிருக்கிறது. கரும்பு ஏக்கருக்கு 150 டன் உற்பத்தி என்று பரிசு கொடுத்தார்கள் இவ்வருடம். பிரைஸ் எங்கள் ஜில்லாவில் கூட கொடுக்கப் பட்டிருக்கிறது, இந்த வருஷம்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: பிரைஸ் என்றால் . . .

திரு .ஓ. பி. ராமசாமி ரெட்டியார்: என்னிடத்தில் வந்து காட்டட்டும். நான் கொடுக்கிறேன் நிலம், அதற்குத் தகுந்த வசதி. Challenge பண்ணுகிறேன். நான் அவர்கள் கேட்குமிடத்தில் நிலம் கொடுக்கிறேன். வசதி கொடுக்கிறேன். செய்து காட்டட்டும். ஏமாற்றிக்கொண்டே போகிறார்கள். இதை அமைச்சர்கள் ஏன் நம்புகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே அமைச்சர்களுக்கும் விவசாயம் பற்றித் தெரியும். இவர் பாட்டுக்கு இப்படிச் சொல்லிக்கொண்டே இருப்பார், சொல்லட்டும் என்று இருக்கிறார்கள். இந்த முறையில் செய்யக்கூடாது. நாம் இந்த நாட்டில் எவ்வளவு கஷ்டப்பட்டோம் சுயராஜ்யத்திற்காக? எவ்வளவு கஷ்டப்பட்டு சுயராஜ்யம் வந்தது? எவ்வளவு தொல்லைகள் நமக்கு? இவ்வளவு அதிகமாக வரிகளைப் போடுகிறோம், இவற்றைச் சரியான முறையில் செலவு செய்கிறார்களா என்று பார்க்க வேண்டியது நம் கடமை அல்லவா?

இன்னும் அநேக விஷயங்கள் சொல்லலாம். சொல்வதற்கு டைம் இல்லை. சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன். முடியவில்லை. எனக்கும் ஏதும் சரிவர நடக்கவில்லையென்றால், ரொம்பக் கோபம் வருகிறது. எனக்கு அது ஒரு defect. அது என்னுடைய சுபாவம். நான் என்ன செய்ய முடியும்? Agricultural Department-இந்த வருஷ பட்ஜெட்டில் Seed distribution என்ற முறையில் 58 லட்சம் அதிகமாகப் போட்டிருக்கிறது, சென்ற வருஷத்தைவிட. 1962--63-ல் 5 லட்சத்திலிருந்து 58 லட்சம். இது எப்படி, எதற்காக, எப்போது செய்யப்போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. விளக்கட்டும் படிக்க Time இல்லை. எனக்குக் கண்ணும் சரி இல்லை. அதனால் படிக்கமுடியவில்லை. இப்படி பல துறைகளில் போய்க்கொண்டிருக்கிறது.

நீர்ப்பாசனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். நீர்ப்பாசனத்திற்கு அதிகமாகச் செய்ய வேண்டுமென்று நான் நினைத்தவன். கனம் 3 50 p.m.
பக்தவத்சலம் அவர்களுக்கும் தெரியும். அவரும் நானும் மாகாணம் பூராவும் சுற்றினோம், இதற்கு என்னென்ன செய்யலாம் என்று பார்க்க.

தென்னாற்காடு ஜில்லாவை எடுத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் இப்போது எங்கேயும் அதிகமாகச் சுற்றவில்லை. ஆகையினால் அந்த ஜில்லாவைப் பொறுத்த வரை பேசுகிறேன். சாத்தனூர் அணை கட்டப்பட்டிருக்கிறது. இப்போது திருக்கோவிலூர் அணையிலிருந்து கிழே French territory வரை 60,000 ஏக்கர் பாசன நிலம் சோழ ராஜா காலத்திலிருந்து சாகுபடியாகி வந்தது.

[திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்] [3rd July 1962

தென் பெண்ணை ஆற்றுப் பாசனம். சரியான முறையில் அங்கே ஒரு அணை கட்டி அதன் மூலமாக முன்னாலேயே இருக்கும் ஆயக் கட்டுக்கு ஏலம் கொடுத்துவிட்டு வட ஆற்காடு ஜில்லாவுக்கும் கொடுக்கவேண்டுமென்று இது ஆரம்பிக்கப்பட்டது. ஏறோ 10,000 12,000 ஏக்கருக்குச் செய்யலாம் . என்று ஆரம்பித்தோம். இப்போது அதற்கு ஆயக்கட்டு என்ன என்று போடப்பட்டிருக் கிறது? 20,000 ஏக்கர் என்றுதான் போடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த மற்ற ஆயக்கட்டு என்ன ஆயிற்று என்று தெரியாது. அது போய் விட்டதா அல்லது சேர்ந்திருக்கிறதா என்று சந்தேகம் ஏற்படுகிறது. 66,000 எகர் அதன் கீழே பாசனம் இருக்கும்போது சேர, சோழ, பாண்டியர்கள் காலத்தில் கூட இதைப்பற்றிப் பாடப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்த முறை யில் பழங்காலத்திலிருந்து ஆயக்கட்டிற்கு இருப்பதற்குத் தகுந்த முறையில் ஜல சப்ளை செய்துவிட்டு மேல் ஆயக்கட்டுக்குப் பாசன வசதி செய்யப்பட வேண்டும். பூரா ஆயக்கட்டு 20,000 எகர் என்று தான் சாத்தனூர் அணைக்குப் போட்டிருக்கிறார்கள். மற்ற 65,000 ஏகர் என்ன ஆயிற்று? திருக்கோவிலூர் அணைக்கட்டுக்குக் கீழே 32,000 ஏகர் இருக்கிறது . . . எல்லிஸ் சத்திரம் அணைக்குக் கீழ் 4,000 ஏகர் இருக்கிறது. அதற்குக் கீழே 30 முதல் 36 ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. இது **open head channels** அணை இல்லாத ஆயக்கட்டு. அந்த ஆற்றிலே நிறைய வெள்ளம் வரும் போது தான் அதற்கு ஜலம் போகும். வெள்ளத்தை சாத்த னூரிலே தேக்கிவிட்ட பிறகு தென் பெண்ணை ஆற்றில் வெள்ளம் வராது. அணைக்கட்டுவதற்கு முன் தென்னாட்டில் 30 வருஷத்தில் 20 வருஷம்தான் வெள்ளம் வரும் என்று கணக்கு இருக்கிறது. நான் கணக்கு எடுத்திருக்கிறேன். அரசாங்கத்திடமே அரசாங்க கணக்கில் இருக்கிறது. என் கிட்டே இருக்கிறது, வேண்டு மென்றால் அனுப்புகிறேன். எந்தெந்த **River-** க்கு ஆற்றுப் பாசனத்தில் எவ்வளவு பாசன வசதி இருக்கிறது, எவ்வளவு வீணாகிக் கொண்டிருக்கிறது என்பதற்கெல்லாம் கணக்கெடுத்து, எவ்வளவு எவ்வளவு வீணாகப் போகிறது என்று கணக்குப் போட்டு வைத்திருக்கிறேன். **Composite province-** ஆக இருந்த போது, கோதாவரி, கிருஷ்ணா பற்றி கூட என்னிடம் கணக்கு இருக்கிறது. அதை எடுத்துக்காட்ட அரசாங்கத்தில் அக்கறை இல்லை யென்றால், அமைச்சர் வேண்டும் என்றால் நான் கொடுக் கிறேன் என்னிடத்திலிருந்து.

முப்பது வருஷத்தில் 10, 12 வருஷம் வெள்ளம் வருவதில்லை. கிருஷ்ணகிரி அணைக்கட்டு கட்டும் போது அங்கே சுமார் 2,500 ஏகர் தான் பாசனம் இருந்தது. இப்போது 10,000 12,00 எக்கர் ஆக்கப் பட்டது. சாத்தனூர் ஏரியாவில் மணலூர்பேட்டை அருகில் 4,000 ஏகர் இருந்தது, வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்த்து அதிகமாக்கி, 20,000 ஏகருக்கு தான் ஆயக்கட்டென்று சாத்தனூர் ரிசர்வாயர் ஆயக்கட்டு பண்ணியிருக்கிறார்கள். இதைப் பற்றி எழுதியதற்கு "இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. இதெல்லாம் அதைச் சேர்த்துத்தான்" என்று பதில் எழுதுகிறார்கள். ஆகையினால்

3rd July 1962] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

இதைப்பற்றி அமைச்சர் கவனித்து அவர்கள் இது விஷயமாக சாத்தனூர் தேக்கத்தைப்பற்றி அவசியம் விளக்க வேண்டும். இல்லையென்றால் கோர்ட்டில் கேஸ்கள் வந்துகொண்டிருக்கும். இழுத்துக் கொண்டுதான் இருக்கும். கேஸ் போடும்படி அரசாங்கம் அதைச் செய்யக்கூடாது. ஜனங்களை அந்த நிலைக்குக் கொண்டு போகக்கூடாது.

மற்ற விஷயங்களை எடுத்துக்கொண்டால்—இந்தப் படிப்பு—நான் அதிகமாக அதைப்பற்றிப் பேச வேண்டுமென்று நினைப்பவன். ஏனென்றால் நான் கிராமத்தில் இருக்கிறேன். நகரத்தில் Elementary, Secondary, Collegiate Education நன்றாக நடக்கலாம். கிராமத்தில் எப்படி நடக்கிறது என்று என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேன். எவ்வளவு பள்ளிகள் அதிகமாக ஏற்படுத்தினாலும் பிள்ளைகள் சேருகிறார்கள். ஆனால் உபாத்தியாயர்கள் அதிகமில்லை. அக்கறையும் எடுத்துக் கொள்வதில்லை. படிப்பெல்லாம் தரத்தில் கீழே போய்க் கொண்டிருக்கிறது. படிப்பின் தரம் ஏன் கீழே போய்க் கொண்டிருக்கிறது என்று பார்க்கும்போது, பழைய காலத்தில் நம்முடைய கணக்குப்படி எடுத்துக் கொண்டால் தெரியும். அப்போது Infant Standard- லிருந்து பிரைமரி படிப்புப் படிப்பவர்களில் ஐந்திலொரு பங்கு மேல் வகுப்புக்கு அனுப்பப்பட்டார்கள் என்ற கணக்கு இருக்கிறது. Primary Examination, Lower Secondary Examination என்று பல கட்டத்தில் பரீட்சைகள் இருந்தன. இப்போது பரீட்சைகளே வேண்டாம் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லுவது தவறு என்று கருதலாம். படிப்பின் தரம் எவ்வளவு கீழே போய்க் கொண்டிருக்கிறது என்பதற்காகக் குறிப்பிட்டேன். பள்ளிகளில் பிள்ளைகளுக்கு உணவு, உடை எல்லாம் இன்று வழங்குகிறோம். இவையெல்லாம் கல்வி அறிவு பரவ வேண்டும். அதன் தரம் உயர வேண்டும் என்பதற்காகவே ஒழிய, உணவுக்காக, ஆடைக்காக அல்ல. பள்ளிக்கூடம் படிப்புக்காக. இப்போது படிப்பின் தரம் எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஒரு S.S.L.C. மாணவனைக் கூப்பிட்டு, ஒரு கடிதம் எழுதச் சொல்லிப் பாருங்கள். இங்கே அரசாங்கக் காரியாலயங்களில் குமாஸ்தாவாகப் பணிபுரிய அனேகம் பேர் வருகிறார்களே, அவர்களிடம் கடிதம் ஒன்றைச் சொல்லி, எப்படி எழுதுகிறார்கள் என்று பாருங்கள். கல்வியைப் பரப்புவதற்காக நாம் நிறையப் பணம் செலவு செய்ய நினைக்கிறோம், எல்லோருக்கும் அறிவைத் துலக்க வேண்டும், படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அதற்குத் தகுந்த முறையில், படிப்பு நன்றாக வர சரியாகக் கண்காணித்து காரியங்களைச் செய்ய வேண்டும்.

அது மாத்திரமல்ல. பழைய காலத்தில், தஞ்சாவூர் நூல் நிலையம், ஓரியண்டல் நூல் நிலையம் போன்ற பல நூல் நிலையங்களில், அனேக ஓலைச் சுவடிகள் சேகரிக்கப் பட்டிருக்கின்றன. நம்முடைய முதாதையர்களில், பல துறைகளில் நிபுணர்களாக இருந்தவர்கள் ஓலைகளில் எழுதி வைத்திருக்கின்றனர். அவைகள்

[திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்] [3rd July 1962

பல தலைமுறைகளாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் செல்லரித்து வீணாகிக் கொண்டிருக்கின்றன. நான் பதவியில் இருக்கும் போது, அவைகளைப் பாதுகாப்பதோடு, எடுத்துப் பிரசுரிக்க வேண்டுமென்றும் நினைத்தேன். இப்போது அந்தக் காரியங்களை ஓரளவு செய்து கொண்டு வருகிறார்கள் என்றாலும், அது போதாது. அதைச் செவ்வனே செய்ய வேண்டுமென்றால், அதற்கு ஒரு 4 கோடி ரூபாய் ஒதுக்கி **Micro-film** மூலமாக எடுத்து, பாதுகாத்து, அதை எப்படிப் பிரசுரிக்க வேண்டுமோ அப்படிப் பிரசுரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பிரசுரிப்பவர்கள் **(Publishers)** ஓராயிரம் பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். பிரசுரிப்பவர்களிடத்தில், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு புத்தகங்கள் வீதம் கொடுத்து பிரசுரிக்கச் செய்து, பிரதிகளை வாங்கி அரசாங்கம் நடத்துகிற நூல் நிலையங்களுக்குக் கொடுத்து விடலாம். அப்படிச் செய்தால் நஷ்டம் வராது. நான் அந்தக் காலத்தில் மத்திய கல்வி அமைச்சர் அப்துல் கலாம் ஆசாத் அவர்களைக் கேட்டேன். 20 லட்சம் வருடம் கொடுக்கிறேன்; 10 லட்சம் நீங்கள் கொடுங்கள் என்றார். அதற்குப் பிறகு இந்த விஷயத்தை யாரும் கவனிக்கவில்லை. அத்தோடு நின்றுவிட்டது. ஓலைச் சுவடிகளில் நல்ல காவியங்கள், சாஸ்திரங்கள் இருக்கின்றன. பௌதீகம், ரசாயனம், அணு ஆகிய பல துறைகளைப் பற்றிய ஓலைச் சுவடிகள் இருந்தன. அவைகளில் சில திருடப்பட்டு விட்டன. இன்னும் சிலவைதான் எஞ்சியிருக்கின்றன. ஆகவே இப்போதிருக்கிற கல்வி அமைச்சராவது அதைக் கவனித்து தகுந்த ஏற்பாடு செய்வார் என்று நம்புகிறேன். நான் திரு. சுப்ரமணியம் கல்வி அமைச்சராக இருந்தபோது அவரிடம் சொன்னேன். செய்கிறேன் என்றார். ஆனால் ஒன்றும் செய்யவில்லை. இவரும் அப்படித்தான் செய்வாரோ, என்னவோ, (சிரிப்பு). அல்லது இவர் இப்படித்தான் சொல்லிக்கொண்டிருப்பார் என்று நினைத்துக் கொண்டு போகிறாரோ, அது எனக்குத் தெரியாது. எப்படி இருந்தாலும் என்னுடைய கடமையைச் செய்துவிட வேண்டுமென்பதற்காகச் சொல்லி விடுகின்றேன். இன்னும் பேச அதிக விஷயங்கள் இருந்தாலும், இத்துடன் என்னுடைய பேச்சை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: தலைவரவர்களே, ஒரு அங்கத்தினர் பேசும்போது இன்னொரு அங்கத்தினர் எழுந்து நின்றால், பேசுகிற அங்கத்தினர் உட்கார்ந்து இடம் கொடுப்பது பழக்கம். ஆனால் கனம் அங்கத்தினர் நான் என்ன சொல்ல விரும்பினேன் என்று கேட்டால் திருப்தியாக இருக்கும். 10 செண்டில் போட்டு காண்பிப்பதைவிட, ஒரு எக்கரா பூராவும் போட்டுக் காண்பிக்க வேண்டும்.

1-00 p.m.

* **SRI M. SESHACHARIAR:** Mr. Deputy Chairman, Sir, while congratulating the Hon. the Minister for Finance on presenting this very well-planned and good Budget, I would like to say a few words on some important points.

3rd July 1962] [Sri M. Seshachariar]

As regards the Budget, many hon. Members have already described it as a very good volume containing large number of documents which we have to wade through to understand all the implications of the Budget proposals. Evidently we may not have much time to go through them as the hon. Member Sri O. P. Ramaswami Reddiar said. It is really difficult to go through all the papers and volumes supplied to us in such a short time and try to understand and explain the whole thing. But when one goes through the entire programmes given in regard to industry, agriculture, irrigation and so on explained in great detail, and the amount that has to be spent on those schemes, one will necessarily come to the conclusion that a certain amount of tax is necessary, is absolutely necessary to execute them. The hon. Member Sri Srinivasavaradan said that all the new schemes were absolutely necessary and they are only those for which we have been urging upon the Government for so long. If all these new schemes have got to be taken up and executed, then surely we will admit that the amount of tax that is now sought to be imposed has got to be levied.

In regard to the financial position, I should think that we are really in a much better position now than we were. The Third Finance Commission have gone through the whole thing and made certain recommendations as a result of which the share to the States out of the central pool of taxes which was much lower some time ago, is much better now. In respect of income-tax, only 60 per cent of the collection was distributed to the States. Now 66-2/3 per cent of the collections will be distributed to the States. Even though the Governments of West Bengal and Bombay fought for a greater share of the collections on the ground that they were collecting much more from those States, the Finance Commission—it must be said to their credit—has stated that it should be distributed on the basis of population. This has been accepted by the Government of India. Thus we have got our due share from this source. In regard to excise duties, formerly the duty was imposed only on eight commodities. Now it is imposed on about thirty-five commodities and the share of our State from this revenue will be about Rs. 4 crores. Besides this, the Central Government have also contributed about Rs. 3 crores for bridging the deficit.

If in spite of all these additional revenues, our Government propose to impose additional taxes, especially land tax, it is because of the general improvement in respect of all taxes. The hon. Member Sri O. P. Ramasami Reddiar mentioned that there was a great deal of improvement in regard to sales tax. It is now of the order of Rs. 20 crores. All the other taxes also show an improvement except land tax. But now what is sought to be levied by the Government is not exactly land tax alone but a tax on irrigation. It is a tax that has got to be levied for the reason that the cost of other things has gone up. The landlord wants more price for his produce because the cost of production has now gone up, and he has to spend more. Now the Government say that the cost of giving him water has gone up and that is why the landlord

is now asked to pay more for the water he takes. That seems to be the reason or justification for this water tax. How they have arrived at this 60 per cent is a different matter that has to be gone into. The general feeling appears to be to make a difference between the dry rate and the wet rate. The criterion seems to be that 60 per cent of the land revenue should be taken as the amount for irrigation. There is another criterion from which also we can understand how they might have arrived at this 60 per cent. In regard to an ordinary crop, the usual tax is levied. But if a double crop is sought to be raised, it is only 50 per cent that is sought to be levied, that is, half of the levy made for the ordinary crop will be levied for the second crop. Somehow they have now decided to levy 60 per cent for the purpose of water-supply alone. For the purpose of improving irrigation facilities, it is really necessary that some amount of levy must be borne by the landholder.

In this connection, I should say, as was rightly pointed out by the hon. Member Sri T. P. Srinivasavaradan, the Government should take steps to collect the arrears. There is a large amount outstanding as arrears. Every year it is to the tune of Rs. 2 crores. Last year it was Rs. 1·99 crores. That is the land tax that is due excluding the other loans and other things. In the previous years also the arrears amounted to Rs. 2 crores. As many hon. Members have pointed out, some amount of drive is necessary to collect these arrears. We know during jamabandi the Collectors convene a meeting of the village munsifs and try to collect the arrears. But still there are large arrears outstanding. Our difficulties would be relieved to a great extent if these arrears are collected.

But one thing is certain with regard to this land tax. Ever since the ryotwari system was introduced, in the initial stages it was 30 per cent of the gross produce. During the Mohamadan rule it was half the gross produce. For a short time it was one-sixth of the gross produce. Later on it was fixed at half the net yield. Therefore, now the Government may rightfully say that the landlord should pay half his net income as land tax, and the half net principle is the one that should be applicable to the ryotwari area considering the benefits conferred on them. We gathered some evidence during our tours in connection with the land legislation and that indicates that the Government would be well within their rights if they adopted this half net principle, that was in vogue in earlier days. My feeling is the Government can raise the tax to some extent but not to this great extent of 60 per cent. Probably this is not land tax that is sought to be levied but only the irrigation portion of it.

In regard to improvements and the amounts that are sought to be spent for agriculture, and on State seed farms, I find much has been said about them. Whatever the Estimates Committee might have said about these State seed farms, if only the Government had continued them, there would have been a great deal of help rendered to the agriculturists. It may be in one or two places

3rd July 1962] [Sri M. Seshachariar]
they had to be run at a loss. The Government cannot expect to get profits from all the farms run in all the areas. In some areas they might have failed. But because in one or two cases there were losses, it does not follow that all the farms should be closed down suddenly. In some cases as soon as the farms are started, they might not give you a profit, for the first one or two years. I find suddenly the Government had closed down nearly 22 farms during last year. We cannot have a profit in all years. It may be that in some cases they fail. As soon as a farm is started, it may not be very profitable. Suddenly 22 farms were closed last year. A number of farms are sought to be started again. It is the opinion of all agriculturists that supply of good seeds from the seed farms is absolutely necessary. There is no purpose in closing down the seed farms. What is going to happen? The Government are going to have Grama Sahayaks, and these Grama Sahayaks are going to distribute seeds to the people. The panchayats are going to distribute the seeds to the ryots through the Grama Sahayaks. How is the panchayat to distribute the seeds? Where is the storage facility for it? Still the Panchayat President is given the right to distribute the seeds through the Grama Sahayaks. How long is he to wait for storage facilities? There is no provision to compel him to distribute the seeds. There must be some provision to collect the paddy seed and store it and then distribute it to the ryots. There is no storage facility, and there is no provision for it either. Also I think that the scheme of distribution through Grama Sahayaks might even fail. 4–10 p.m.

The next thing is about subsidy for tube-wells. There is delay in the issue of loans. Throughout last year, the amount that was distributed was Rs. 17 lakhs, though the amount is now raised to a higher figure. The subsidy is also raised to Rs. 500. The amount distributed last year was only Rs. 17 lakhs.

This shows that there was unnecessary delay in the issue of loans. The delay has got to be cut down. We have got to see that loans are disbursed properly to the ryots in time.

In regard to co-operation, I would like to say a few words. Several difficulties have arisen now. The first difficulty is the starting of the full finance scheme throughout the block areas. Once we initiate the full finance scheme, it means that we deprive people of all loans from all other sources, and the credit-worthiness of the man. Suppose a ryot wants to purchase cattle; he is not given any loan. It is a medium-term loan. Suppose he wants to improve his land. The money cannot be obtained from the banks. If he wants to purchase a small part of the adjoining land, he cannot get money. For all these things, medium-term loan of two or three years should be given. He cannot go to the land mortgage banks. The medium-term loan is not supplied by the State Government. They say that it is impossible. No Co-operative Central Bank is in a position to give him medium-term loans. No one can discharge a loan within ten months, unless it be a very small amount. It is not for cultivation alone that a ryot requires

money. He wants money for so many other purposes like purchase of bulls, etc. Nobody is advancing him money for all these. This is a great handicap in regard to co-operative movement.

The difficulty about the co-operative marketing society is this. The marketing societies that market the produce of the members act only as a liaison. But in spite of this, sales tax is levied on most of the marketing societies. Though it has been explained to the officers several times, still they continue to levy sales tax. A number of marketing societies get only the commission in the sales. The marketing society act only as a liaison between the producer and the buyer, and they get only a commission. But in most of the cases, it is deemed as a sale, and sales tax is being levied on the sales.

Sir, the Government have sanctioned Rs. 21,000 for each of these four rice mills. A number of them have constructed buildings for rice mills. The unfortunate thing is that some difficulty has arisen. Licences have not been issued to a number of them. That is because they feel that the Central Act has got to be amended, and that the co-operative societies cannot be preferred. I was asking, as between a private applicant and a co-operative society, if everything was equal, would they choose the co-operative society? Even here there appears to be some difficulty. It appears that they are writing to the Central Government for amending the Act. I think this has got to be at once remedied if the co-operative movement is to survive.

In regard to industries, I would say only this. Industries have been started simultaneously in a number of places. Industries are still growing. We want industries to thrive. But most of the industries, which we have started for demonstration or training purposes, as was stated by Sri Balasubramanya Ayyar, and as stated in the Audit Report, work at a loss. What does it indicate? It only indicates that we are training people only to be mechanics who can understand the crafts. But we are not training people for management. There is nobody to manage these industries properly. As President of a co-operative industrial concern, I see industries where work starts. The men keep quiet till the work starts. When all the machines have started work, the men want spare parts, and then they call for quotations from Bombay or Calcutta. It takes two or three months to receive the quotations. Like this the industry suffers. The men do not take interest. Then again the question of production cost is not considered at all. To cut down the cost and produce more, is the rule everywhere in the West. But that does not appear to be the rule at all here. There is no proper management in all these industrial co-operatives. I think we have got to see that the proper men are put in. Co-operative Inspectors, who do not have much of experience in this, should not be put in. Not even mechanics who can understand only the mechanism. But we must put in only persons technically qualified. The technical training course must also include a course of business management. Training in business management, I think, Sir, is absolutely necessary.

3rd July 1962] [Sri M. Seshachariar]

In regard to the deficit in the budget, Sri Balasubramanya Ayyar was saying that the deficit might be left there uncovered. He said also that the deficit might lead to inflation, but when the deficit is sought to be covered, he says that it might be left uncovered. But I think the proper thing would be to cover the deficit as far as possible even now. We have got some amount of deficit which can be adjusted.

With these words, Sir, I conclude.

ஸ்ரீ கே. வி. ராமசாமி: கனம் உப தலைவரவர்களே, இன்றைய தினம் நம்முடைய நிதி அறிக்கையை வரவேற்றுச் சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். நிதி அறிக்கையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற இருக்கிற திட்டங்களைப் பற்றியும், இதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகள் பற்றியும், வரவு செலவு பற்றியும் நிதியமைச்சரவர்கள் விளக்கிக் கூறியுள்ளார். நம்முடைய நாடு முன்பு இருந்ததைவிட இப்போது எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதை அந்த அறிக்கையில் அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆனால் அதே நேரத்தில், சில புதிய வரிகளைப் போட்டிருக்கிறார். புது வரி என்றால் பல பேருக்கு பீதி ஏற்படுவது சகஜம். வரி போடாமல், ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அந்த வரியை யாரிடத்தில் வசூலிப்பது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். குறிப்பாக விவசாயிகளுக்கு முன்பு எவ்வளவு வரி இருந்தது, இப்போது எவ்வளவு ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் பார்க்கிற போது, அந்த வரிக்கு ஒப்ப விவசாயிகளுக்கு என்ன சௌகரியம் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகளாகும். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் செய்ய வேண்டுமென்பது நம்முடைய சர்க்காரின் கவனத்தில் இருக்க வேண்டியது மிக முக்கியமானதொன்றாகும். அடுத்து, விவசாயம் நல்ல சீரான முறையில் முன்னேற்றமடைய வேண்டுமானால், முன்னேற்றமடைந்து உணவு உற்பத்தி பெருக வேண்டுமானால், அதுதான் நம்முடைய நாட்டுக்கு இன்றைய தினம் முதலில் செய்யப்பட வேண்டியது. அப்படிச் செய்யவேண்டுமானால், முதலில் நமக்கு மண்வளம் சரியாக அமைய வேண்டும். அதற்கு அடுத்தது நீர்ப்பாசன வசதி இருக்க வேண்டும். அதற்கு அடுத்தபடியாக உரம் அவசியம். இவைகள் எல்லாம் இருந்தாலும், வேலை செய்ய ஒழுக்கமான ஆட்கள் தேவை. கூலியாட்கள் நல்ல முறையில் வேலை செய்தால்தான் எந்தத் தொழிலும் அபிவிருத்தி அடைய முடியும். ஆகவே அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்க வேண்டும். விவசாயத்தில் ஆகட்டும் அல்லது மற்ற எந்தத் தொழிலில் ஆகட்டும், கீழ்த்தரத்தில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு அதிகச் சலுகை கொடுத்து அவர்களை ஊக்குவித்தால்தான், எந்தத் தொழிலும், அந்தத் தொழில்களைப் பெற்றுள்ள நாடும், முன்னேற்றம் அடைய முடியும். விவசாயிகள், அதுவும் குறிப்பாக எங்கள் ஜில்லாவில் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்துத்தான் பயிர் செய்ய

4–20 p.m.

[திரு. கே. வி. ராமசாமி] [3rd July 1962

வேண்டியிருக்கிறது. நூறு அடிகளுக்குக் குறையாத கிணறுகள் தான் எங்கள் ஜில்லாவில் இருக்கின்றன. குறைந்தது 15,000 ரூபாய் இருந்தால் தான் அங்கே கிணறுகள் வெட்டமுடியும். அப்படிக் கிணறு தோண்டி அதிலிருந்து சில இடங்களில் இரண்டு பம்பு செட்டு வைத்து தண்ணீர் இறைத்து ஒரு பம்பு செட்டு மேலே எடுத்துக் கொடுக்கும், ஒரு பம்பு செட்டு அதற்கு மேலே நிலத்துக்குப் பாய எடுத்துக் கொடுக்கும்--அந்த முறையில் விவசாயம் செய்கின்றோம். அப்படிப்பட்ட இடங்களுக்கு முக்கியமாக நீர்ப்பாசனத் திட்டம் அவசியம். பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்த காலத்தில், மேல் பவானி திட்டத்தை ஏற்படுத்த அங்கு கற்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. அதனை யாரும் கவனிக்காமலோ அல்லது சந்தர்ப்பம் இல்லாமலோ விட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள், மேட்டுப் பாங்கான பிரதேசங்களுக்கு, நல்ல உழைப்பாளிகள் இருக்கக்கூடிய ஜில்லாக்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதைக் கவனத்தில் கொண்டு, அவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டியது சர்க்காரின் கடமையாகும். எங்களுடைய ஜில்லாவுக்கு வரும்போது, ஒவ்வொரு மந்திரியும் மேல் பவானித் திட்டம், மேல் பவானித் திட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் நம்முடைய மதிப்புக்குரிய பட்டகார் அவர்கள் கூட்டுறவு மந்திரியும், விவசாயத்தில் சிறந்த வருமான அவர்கள், எங்கள் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் வரும் போது, அவர் கூட நான் போன போதெல்லாம், பேச்சே மேல் பவானித் திட்டம் தான். அதைத் தவிர வேறொன்றுமில்லை. ஆகவே அதை மிகச் சிறந்த முறையில் தேர்ந்தெடுத்து மேட்டுப் பாங்கான பிரதேசத்துக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டியது மிக மிக முக்கியம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு விவசாயி விவசாயத்திற்கான சாதனங்களை அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு அந்தந்த சந்தர்ப்பங்களில் அவை கிடைப்பதில்லை. உதாரணமாக, சோளப் பூச்சி மருந்துகள் இருக்கின்றன. சோளம் விளைந்து பூட்டையில் பூச்சி விழுந்துவிட்டது என்றால் இரண்டு நாட்களுக்குள் அதற்கு மருந்து அடிக்காமல் விட்டால் பூரா சத்தும் அதிலிருந்து உறிஞ்சப்பட்டுவிடும். விளைச்சல் இருக்காது. அந்த சந்தர்ப்பத்தில் மருந்து ஸ்டாக் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். பிறகு அது எப்படி விளையும்? விவசாயி என்ன செய்வான்? யோசனை செய்ய வேண்டும். அதற்காக ஒரு டிபார்ட்மெண்ட் என்று வைத்திருக்கிறோம். அதில் எவ்வளவு சோளம் பயிரிடப்படுகிறது என்ற புள்ளிவிவரம் எடுத்து, தேவைப்படும் போது தேவைப்படும் இடங்களுக்கு அவற்றை அளிக்க முயற்சி செய்யவேண்டும். அதைத் தெரிந்து செய்யவேண்டிய பொறுப்பு அதிகாரிகளிடத்தில் இருக்கும்போது, அவர்களே மருந்து இல்லை என்று சாதாரணமாகச் சொல்லிவிடுகிறார்கள் என்றால் அதில் என்ன இருக்கிறது என்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு வருஷம் பூராவும் படிப்படியாக கஷ்டப்பட்டு

3rd July 1962] [திரு. கே. வி. ராமசாமி]

பயிர் வளர்த்து அதில் பூச்சி வந்து மருந்து அடிக்கவேண்டுமென்ற சமயத்தில் மருந்து இல்லை என்று கையை விரித்தால் குடியானவனுக்கு எவ்வளவு நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுகிறது? உணவு உற்பத்தி என்று சொல்லிக்கொண்டிருப்பதால் மட்டும் என்ன பிரயோஜனம்? அவன் வேலை செய்யாமல் இருந்தானா? தண்ணீர் இறைக்காமல் இருந்தானா? மினிமம் சர்சார்ஜ் கட்டாமல் இருந்தானா? உரம் போடாமல் இருந்தானா? இவ்வளவையும் செய்துவிட்டு கடைசியில் வெள்ளாமை கெட்டுப்போகிறது என்று சொன்னால், அதற்குப் பொறுப்பான அந்த அதிகாரியைக் கண்டு பிடித்து உடனே டிஸ்மிஸ் செய்ய வேண்டாமா? அவன் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? இதுவரை என்ன அப்படி எடுக்கப்பட்டிருக்கிறது? மதிப்பிற்குரிய அங்கத்தினர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் கூறினார்கள். அது உண்மை. அதைக் கவனிக்காமல் இருப்பதால் பல அதிகாரிகள் சிரத்தை இல்லாமல் போகிறார்கள். அதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் பல கேடுகள் தான் உண்டாகின்றன. நானே நேரில் போய் மருந்து கேட்டேன். அப்போதும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். டெவலப் மெண்ட் கவுன்சில் மீட்டிங் நடக்கும்போது அவரைக் கேட்டேன். மருந்து வந்திருக்கிறது என்று சொல்கிறார். ஏனய்யா முன் நான் கேட்டபோது இல்லை என்று பொய் சொன்னாய் என்று கேட்டேன். சபையில் உட்கார்ந்துகொண்டு அவர் சொல்கிறார் வந்திருக்கிறது என்று. இந்த மாதிரி இருந்தால் அது அவருடைய குற்றமில்லை. நம் அரசாங்கத்தின் குறைதான் அது. மக்கள் அவர்களைக் குற்றம் சொல்லமாட்டார்கள். அரசாங்கத்தைத்தான் குற்றம் சாட்டுவார்கள். காங்கிரஸ் ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்கிறது என்ற கெட்ட பெயர் வருகிறது.

விவசாயி இப்போது தோட்டத்திற்குப் போய்த்தான் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. ஆளை வைத்துப் பயிரிட்டால் அவன் ஆறு மணி நேரம் எட்டு மணி நேரம் என்று வேலை செய்துவிட்டு அப்படி அப்படியே விட்டுவிட்டுப் போய்விடுகிறான். இப்போது ஆட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் அங்கங்கு தோட்டத்திற்கு பக்கத்தில் ஒரு மைலில் முக்கால் மைலில் விவசாயி தனியே குடியிருந்துகொண்டுதான் பயிர் செய்யவேண்டியிருக்கிறது. தனியாகக் குடியிருப்பதால் அவர்களுக்குத் திருடர்கள் பயம் அதிகம். கல் எறிகிறார்கள், அவர்களுடைய குழந்தைகள், பெண்டாட்டி நகைகளை, தாலியைக்கூட பிடுங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு தேவையாக இருக்கிறது. இதுபற்றி போலீஸ் துறையில் சொன்னால் அவர்களும் அதைக் கவனிப்பதாக இல்லை. இப்படி இருந்தால் விவசாயி எப்படி உணவு உற்பத்தி செய்வது? பாதுகாப்புக்காக ஒவ்வொரு விவசாயிக்கும் துப்பாக்கி லைசென்ஸ் அவசியமாகக் கொடுக்கவேண்டும். மலைக் காடுகள் பக்கத்தில் மிருகங்களின் தொந்திரவு அதிகமாக இருக்கிறது. அவர்கள் அவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் துப்பாக்கி அவசியம் அவர்களுக்குத் தேவை.

[திரு. கே. வி. ராமசாமி] [3rd July 1962

அடுத்தபடியாக, ஒவ்வொரு அரசாங்கப் புறம்போக்கு நிலத்திலும் கொளுஞ்சி உரம் பயிர் செய்யப்படவேண்டும். மீன் உரமும் அவசியமானது. கனம் அங்கத்தினர் தங்கவேல் முதலியார் அவர்கள் மீன் உரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது பாராட்ட வேண்டியதுதான். மீன் உரம், கொளுஞ்சி உரம் இவை முக்கிய மான உரங்களாகும். அதைத் தயார் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் அதற்காகக் குடியானவனுக்கு உதவி செய்வது மிகமிக முக்கியம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இட்டேரிகளில் முள் வேலிகளைப் போட்டு அது இரண்டு பக்கங்களிலும் படர்ந்து இருக்கிறது. டவுனில் இருக்கிறவர் களுக்கு அது தெரியாது. கிராமத்திற்கு அடிக்கடி போய்க்
4-0 p.m. கொண்டிருக்கிறவர்களுக்கு அந்தக் கஷ்டம் தெரியும். அந்த முள் இரண்டு பக்கத்திலும் வந்து கொஞ்சம் ஏமாந்தால் கண்ணைக் குத்துவதாக இருக்கிறது. பட்டா பூமிக்காரர்கள் அவன் இட்டேரியை வளைக்கிறானே நாமும் வளைக்கலாம் என்று இட்டேரியை வளைத்துக்கொண்டு விட்டார்கள். வண்டி போகக் கூட முடியாமல் இருக்கிறது. இதை ஜல்லி மண் போட்டு ஒவ்வொரு இட்டேரியையும் சுத்தம் செய்யவேண்டும். கிராம நலத்தை முக்கியமாக மனதில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு இட்டேரிக்கும் ஏதாவது ஒரு எஸ்டிமேட் போட்டு இந்தப் பட்ஜெட்டில் அதற்கு ஏதாவது ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பது தான் என்னுடைய தாழ்மையான கேள்வி. விவசாயிக்குப் போக்குவரத்து வசதி வேண்டும். லைட் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. முதலில் போக்குவரத்து வசதி வேண்டும். அதற்கு நிர்மாணத் திட்டத்தில் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டு மென்பது என் தாழ்மையான வேண்டுகோள்.

அடுத்தபடியாக, பொதுவாக இருக்கக்கூடிய சீர்கேடான நிலங்களைக் கூட்டுறவு முறையில் பயிர் செய்யவேண்டியது மிக மிக முக்கியம். புல்டோசர் டிரேக்டர் முதலியவைகளைக் கொண்டு வந்து நிலத்தைச் சீர்திருத்துவது என்பது சாதாரணக் குடியான வனால் முடியாது. ஆகையால் அவற்றை சீர்திருத்தம் செய்ய கூட்டுறவு முறையில் கொடுப்பது மிகவும் முக்கியம். குறிப்பாக தியாகிகளுக்கு முதலில் நிலம் கொடுத்து இப்போது அதைப் பிடுங்கிக் கொண்டார்கள். அந்தக் குறையை நிவர்த்தி செய்து அந்தத் தியாகிகளுக்கு நிலத்தைப் பிரித்துக்கொடுத்து அவர்கள் பயிர் செய்யும் நிலைமையை உண்டுபண்ணினால் கூட்டுறவு முறையில் உற்பத்தி பெருகும். அது நாட்டுக்கு நல்லது.

மின்சாரத்தைப்பற்றி நான் அடிக்கடி பேசியிருக்கிறேன். விவசாயிக்குப் பகலில் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். மினிமம் சார்ஜைக் குறைக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். குறைப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அது அமுலுக்கு வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நான் மூன்று தவணையாகக் கேட்டுக்கொண்டு கட்டிக் கொண்டுதான் இருக்கிறேன். அதை அவசியம் செய்யவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

3rd July 1962] [திரு. கே. வி. ராமசாமி]

அடுத்தபடியாக, கிணறு வெட்ட மானியம் கொடுக்கிறார்கள். அது ரூ. 750 என்பது அங்கு அந்தப் பக்கங்களுக்குப் போதாது. இங்கே கொஞ்சம் பறித்தால் தண்ணீர் வரும். இந்த மாதிரி இடங்களுக்கு அது சரி. அங்கெல்லாம் பாறையை உடைத்து வெகு ஆழம் தோண்டவேண்டும். 50 அடிக்கு மேல் சுவர் எழுப்ப வேண்டும். இல்லாவிட்டால் கிணறு தூர்ந்து போகும். ஆகையால் இந்த ரூ. 750 போதாது. அதற்கு மானியம் தந்து கடன் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வி விஷயத்தில் இந்த விவசாயிகளுடைய குழந்தைகளுக்கு நல்ல சலுகை கொடுக்க வேண்டும். இத்தனை வருமானத்துக்கு மேலே இருந்தால் வரி என்று போட்டு விடுகிறார்கள். விவசாய மந்திரியும், கல்வி மந்திரியும் இதை மனதில் கொண்டு அவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டும். தியாகிகள் குழந்தைகளுக்குச் சலுகை காலேஜ் வரை படிக்கலாம் என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அவன் கஷ்டத்தைத் தவிர வேறு ஒன்றும் கண்டதாகத் தெரியவில்லை. அந்தமாதிரியான நிர்ப்பந்தங்கள் கஷ்டங்கள். தியாகி என்றால் அந்த நேரத்தில் ஏதோ போனான். அவனுக்குப் படிப்பு இல்லை. ஒன்றுமில்லை. ஒரே நோக்கத்தில் போனான். ஜெயிலுக்குப் போனான். எத்தனை வருஷம் போடுகிறாய்? போடு என்று போனான். அவனுக்கு ஒரே நோக்கம் வெள்ளைக்காரனை வெளியேற்றி நாம் சுதந்தரமாக வாழவேண்டு மென்பது. அப்பேர்ப்பட்டவர்களுடைய குழந்தைகளுக்கு இன்று படிப்புக்குகூட திக்கில்லை என்றால், நாம் "தேசத்துக்காகப் பாடுபட வாருங்கள்" என்று அழைத்த அழைப்புக்கு என்ன பெருமை இருக்கிறது என்று பாருங்கள். நான் அந்தப் பக்கத்துக்கு ஒரு 'சுண்டெலி ராஜா' மாதிரி. என்னைப் போல் இருப்பவர்கள் கூப்பிட்டவுடன் புறப்பட்டு விட்டார்கள். இப்போது அவர்களெல்லாம் கிழவர்களாகி விட்டார்கள். இப்போது அவர்கள் எல்லாம் பிள்ளை குட்டி பெற்று பள்ளிக்கூடம் அனுப்பும் நிலைமையில் பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. என்னைத் தியாகிகள் கமிட்டி தலைவனாக வேறு வைத்திருக்கிறார்கள். இது எனக்குப் பெரிய உபத்திரவமாக இருக்கிறது. என் உபத்திரவத்தைக் குறைப்பதற்காகவாவது சர்க்கார் கொஞ்சம் மனம் வைத்து அந்தக் குழந்தைகள் கல்விச் சலுகையை எந்தவித அசந்தர்ப்பமும் கஷ்டமும் இல்லாத முறையில் உடனுக்குடன் குழந்தைகள் படிக்க வசதி செய்து தர வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் அவர்கள் கஷ்டப்படும் நிலைமையை பார்த்துச் சொல்கிறேன்.

தியாகி என்ற பெயராலே சிலர் மில்லில் இருக்கிறார்கள். இத்தனை ரூபாய் வருமானத்துக்கு மேலே இருப்பவர்களுக்கு அந்தச் சலுகை இல்லை என்று வைத்திருக்கிறார்கள்—1,200 ரூபாயோ என்னவோ. மில்லுக்குப் போகிறவன் சாதாரணமாக 100, 110 ரூபாய் வாங்குகிறான். அந்த அளவுக்கு ரூ. 1,200

[திரு. கே. வி. ராமசாமி] [3rd July 1962

வருவாய் வருவதாகக் கணக்குக் காட்டுகிறார்கள். செலவு என்ன என்று பார்ப்பது இல்லை. அவன் 10 குழந்தைகள் பெற்றிருக்கிறான். அவைகளுக்குத் துணி வாங்கக்கூட காசில்லாத நிலையில் கஷ்டப்படுகிறான். 'உனக்கு ரூ. 1,200 வருமானம் வருகிறது. ஆகவே நீ பணம் கட்டு' என்றால் அவன் என்ன செய்வான்? அதே போல் என்னுடைய குழந்தைகளையும் அப்படிப் பணம் கட்டித் தான் சேர்த்து விட்டு வந்தேன். பெரியநாயக்கன்பாளையம் அவினாசிலிங்கம் செட்டியார் பள்ளிக்கூடத்தில் பணம் கட்டு என்று சொல்லிவிட்டார்கள். எனக்கு வேறு ஒன்றும் சம்பாத்தியம் இல்லை. அந்த நிலையிலுள்ள என்னை—தியாகிகள் தலைவரிடத்தில்—அவர் அப்படிப் பணம் கட்டு என்று சொன்னார்கள் என்றால் மற்றுமுள்ள எனக்கும் கீழ்ப்பட்ட தியாகிகள் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை இந்தச் சபையிலுள்ள மந்திரி அவர்கள் நன்கு பரிசீலனை செய்ய வேண்டுமென்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரியான நிலை தியாகிகளுக்கு இருக்கிறது. செத்தவர்கள் போக கொஞ்சம் பேர்தான் இருக்கிறோம். இந்தக் காலத்தில் செய்யவில்லை என்றால் அப்புறம் "யார் இவன்? என்னவோ, பண்ணினான், போனான்," என்ற நிலைதான் ஏற்படும் எதிர்க்கட்சிக்காரர்களுக்குக்கூட இந்தத் தியாகிகளிடத்தில் கருணை இருக்கிறது. அந்த நிலை நம் ஆட்களிடத்தில் இல்லை என்றால் என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. இவற்றை இப்போது நீக்க சிந்தனை செய்து—அவன் கூலி கேட்க வரவில்லை, தேசம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்ற ஆர்வத்தில் வந்தவர்கள்—இதை மனதில் கொண்டு செய்ய வேண்டுமே தவிர, ஏதோ பிச்சை கேட்கவில்லை. கேவலம் ராணுவத்துக்குப் போனால் அவர்களுக்கு எவ்வளவோ சலுகை கொடுக்கிறார்கள். தேசத்துக்கு உயிர் கொடுத்த உத்தமர்களுடைய குழந்தைகள் இன்னும் திக்கற்ற நிலையில் இருக்கிறார்கள். அதை இன்னும் கவனிக்கவில்லை என்றால் என்ன செய்வது என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக, மருத்துவ விஷயங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்கிறேன். மருத்துவ விஷயங்களைப் பற்றி உங்களுக்கு ரொம்ப ஹாஸ்யமாக இருக்கும். நான் சட்டசபையில் மெம்பராவதற்கு முன்பு எனக்குக் குழந்தை பிறந்தது ஜெனரல் ஆஸ்பத்திரியில். எனக்கு பூமி இருக்கிறது 22 ஏகர். விளைச்சல் எவ்வளவு என்று கேட்டால் 1½ பொதி பருத்தி. அந்த நிலையில் **M. L. C.** ஆன பிறகு எனக்கு நோட்டீஸ் வருகிறது. 'உனக்குக் குழந்தை பிறந்ததற்கு நீ பணம் கட்டவேண்டும் ரூ. 39-52 ந.பை. சில்லரை' என்று. கீழே பாயில் படுக்க முடியாததால் என் மனைவி பிரசவ டைமிற்கு வருவோம் என்று அண்ணன் வீட்டுக்குப் போனாள். ஒரு நாள் தான் இருந்தாள் ஆஸ்பத்திரியில். அந்த ஒரு நாளைக்கு இந்த மாதிரி சார்ஜ் போட்டு வந்தது. இரண்டு, மூன்று தடவை வந்தது. 'எனக்கு அந்த மாதிரி வரும்படி இல்லை. நான் கொடுக்க வேண்டியதில்லை' என்று திருப்பி அனுப்பினேன். மறுபடியும்

3rd July 1962] [திரு. கே. வி. ராமசாமி]

அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஐப்திக்குகூட order ஆகிப் போச்சு. பாருங்கள் தியாகியின் பெருமையை (சிரிப்பு). உங்களுக்குச் சிரிப்பாக இருக்கிறது. நான் எரிச்சலில் பேசுகிறேன்.

திரு. க. அன்பழகன்: குழந்தையை ஆஸ்பத்திரியில் கொடுத்து விடுவதுதானே.

திரு. கே. வி. ராமசாமி: கேட்டால் நான் கொடுக்கத்தானே வேண்டும். நான் கொடுக்கத் தயார். அவர்களும் வளர்ப்பார்கள். 4-40 p.m. இல்லாவிடில் கிறிஸ்தவ மடத்திற்குக் கொண்டு போனால் அவர்கள் வளர்த்துக் கொள்வார்கள். அந்தத் தைரியத்தில்தான் குழந்தை பெற்றுக்கொண்டிருக்கிறோம் (சிரிப்பு). தியாகிகள் குடும்பத்திற்கும் குழந்தைகளுக்கும் வைத்திய வசதி செய்வதுடன்— Allopathy, யூனானி, ஹோமியோபதி, சித்த ஆகிய 4 முறைகள் இருக்கின்றன. இந்த நான்கையும் பயன்படுத்தி வருகிறது இந்த சர்க்கார். பண்டைக் காலத்திலிருந்து யூனானி சித்த வைத்தியம் நன்றாகச் செய்யப்பட்டு மக்களுக்குச் சேவை செய்து வருகிறது. இப்போது Allopathy தான் அதிகமாக இருந்து வருகிறது. அதுவும் இருக்கட்டும். ஆபரேஷன் போன்றவைகள் எல்லாம் அவர்கள் செய்யட்டும். அதற்கு முடியாத நேரத்தில் சாதாரணமாக கிராம மக்களுக்கு இந்த வைத்தியத்தில் எல்லாம் மிக நல்ல முறையில் சிகிச்சை செய்து வருகிறார்கள். நாம் நேரில் பார்க்கிறோம். ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'க்யூ' வரிசையில் நிற்கிறார்கள் நோயாளிகள். நோயாளி எத்தனை மணி நேரம் நிற்க முடியும்? 3 மணி, 4 மணி நேரம் ஒரு நோயாளியால் நிற்க முடியுமா? ஆகையினால் நோயாளிக்கு வசதி செய்ய வேண்டியது அத்தியாவசியம். நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். நோயாளிகளைப் போய் 'க்யூ' வரிசையில் நிற்கச் சொன்னால் எப்படியிருக்கும்? 'க்யூ' வரிசையில் ஏராளமாக நோயாளிகள் இருந்தால், டாக்டர் தான் என்ன செய்ய முடியும்? கையைப் பார்ப்பாரா, கண்ணைத் தொட்டுப் பார்ப்பாரா? ஆகையினால் தான் கூறுகிறேன் மற்ற வைத்திய முறைகளையும் அமுலுக்குக் கொண்டு வந்தால், அந்த முறைகளில் பயிற்சி பெற்ற டாக்டர்களும் நமக்குக் கிடைத்தால், டாக்டர்கள் பற்றாக்குறை நிவர்த்திக்கப்பட்டு, அவர்களும் நோயாளிகள் பக்கத்தில் போய்ப் பரிசோதித்து அவர்களைக் கவனிக்க சந்தர்ப்பம் ஏற்படுவதுடன், அப்படிச் செய்வதன் மூலம், நோயாளிகளுக்கும் நம்பிக்கை ஏற்படுகிறது. ஆகவே, டாக்டர் இல்லாத குறையை நிவர்த்திக்க இந்த வைத்திய முறைகளை அமுலுக்குக் கொண்டு வருவது நாட்டுக்கு மிகவும் முக்கியம் என்று தெரிவித்து, எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்த சபைத் தலைவரவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். வெங்கடாசலம்: மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, கனம் நிதியமைச்சரவர்கள் 1962-63-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து, இதுகாறும் நம்முடைய மாநில

அரசு சாதித்தவைகள் பற்றியும், இனி சாதிக்க இருப்பவைகள் பற்றியும் குறிப்பிட்டார்கள். திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டு மென்ற காரணத்திற்காகவும், இந்த ஆண்டு வரவு செலவுக் கணக் கில் பற்றுக்குறை ஏற்படுகிற காரணததாலும், புதிய வரிகள் பல போட உத்தேசித்திருப்பதாகவும் அறிவித்துள்ளார்கள். அப்படிப் போட உத்தேசிக்கப்பட்டுள்ள வரிகள் ஏழை மக்களை மிகவும் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கின்ற காரணத்தால், இந்த வரிகள் விதிக்கப்படக் கூடாது என்ற கருத்தை நான் வலியுறுத்திப் பேச ஆசைப்படுகிறேன். வரிபோடாமல் எப்படி ஆட்சி நடத்துவது என்று அமைச்சர் அவர்கள் கேட்கக் கூடும். வரிகள் வேண்டாம் என்று கூறுபவர்கள் அல்ல நாங்கள். போடக்கூடிய வரிகள் ஏழை மக்களையும், நடுத்தர மக்களையும் பாதிக்காத வகையில், வரி செலுத்த வசதியுள்ளவர்கள் செலுத்தும்படியாக இருக்க வேண்டு மென்று நாங்கள் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றோம். ஆனால் தெரிவித்துள்ள வரிகளில் முதலாவதாக பஸ்கள், போக்கு வரத்து வண்டிகள் மீது உள்ள வரியை உயர்த்த இருப்பதாகக் கூறியிருக்கிறார். இந்த பஸ்வரி உயர்வால் இறுதியாக பாதிக்கப் படுபவர்கள் பெரும்பாலும் ஏழை மக்களே ஒழிய, வசதி படைத்த வர்கள் அல்ல என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியவர் களாக இருக்கின்றோம். அடுத்து லாரிகளுக்கு அதிக வரி விதிக்க இருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்கள். பொதுவாக இந்த மாநிலத்திலே உள்ள வரிகளிலே, லாரியின் மீது உள்ள வரிதான் அதிகம். இருந்தபோதிலும் கிட்டத்தட்ட 45 சதவிகிதம் லாரி களுக்கு வரியை உயர்த்த உத்தேசித்திருப்பதாக அவர் தெரிவித் திருக்கிறார். அப்படி உயர்த்துவதால், வெளி மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்துக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் வருவதற்கு இடைஞ்சலாக அது அமையக்கூடும். இந்த மாநிலத் துக்கும் மற்ற மாநிலங்களுக்கும் இடையில் ஓடிக்கொண்டிருக்கக் கூடிய லாரிகளின் சொந்தக்காரர்கள் இந்த வரி உயர்வால், லாரி களை இந்த மாநிலத்துக்கு அனுப்பாமல் நிறுத்திவிட்டால், வெளி மார்க்கெட்டுகளிலிருந்தும், வேறு மாநிலத்திலிருந்தும் நம்முடைய மாநிலத்துக்கு சரக்குகள் வர முடியாமல் போய், அதன் காரண மாக விலைவாசி மேலும் உயருமே தவிர, குறையாது. அதுவும் தவிர, நம்முடைய ரயில்வேயில் உள்ள (ரயில்வே) வாகன் வசதிகள் மிகவும் குறைவு. இந்த மாதத்தில் வாகன் தேவை, அத்தியாவசிய உணவுப் பண்டங்களை வேறு இடத்திற்கு அனுப்ப என்று எழுதி வைத்தால், வாகன் கிடைக்க ஒரு மாதம் இரண்டு மாதம் ஆகிறது. ஆகவே வாகன் மூலமாக சரக்குகளை வரவழைப்பது என்றால், கால தாமதமாகும். அதற்குள்ளாக மார்க்கெட்டில் சரக்கு இல் லாத காரணத்தால், வியாபாரிகள் விலையை ஏற்றக் கூடும். ஆக விலைவாசிகள் ஏறுமே தவிர, குறையாது. விலைவாசிகள் இன்று அதிகமாக இருப்பதற்குக்கூட காரணம் லாரி போக்குவரத்து பற்றுக்குறை என்று சொன்னாலும் அது மிகையாகாது. நம் முடைய மாநிலத்துக்கு அத்தியாவசியமான பண்டங்களான நெல், மிளகாய், தனியா, புளி போன்றவை, அண்டை மாநிலங்களான ஆந்திரத்திலிருந்தும், மைசூரிலிருந்தும் தான் அதிகமாக

3rd July 1962] [திரு. ஆர். வெங்கடாசலம்]

வருகிறது என்பதை யாவரும் அறிவர். அப்படிப்பட்ட சரக்குகள் லாரிகளில் அதிகமாக வருகிற காரணத்தால் தான், வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு விலையை ஓரளவுக்காவது குறைத்து விற்க வசதி இருக்கிறதே தவிர, லாரிகள் இல்லை என்றால், அது உண்மையிலேயே விலை ஏற்றத்துக்கு வழி கோலுவதாகத்தான் இருக்கும். ஆகவே மற்ற எந்த அண்டை மாநிலங்களிலும், இல்லாத அளவுக்கு லாரிகள் மீது வரிவிதிப்பு அவ்வளவு பொருத்த மாக இருக்காது என்று கனம் நிதியமைச்சரவர்களுக்குத் தெரி வித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நில வரியை உயர்த்த இருப்பதாகவும் குறிப்பிட்டி ருக்கிறார்கள். நில வரியைத் தண்ணீர் தீர்வை என்ற பெயரால் நஞ்சை நிலத்துக்கு 60 சதவிதமும், 40 சத விதமும், புஞ்சை நிலத்துக்கு 100 சத விதமும், 50 சதவிதமும் உயர்த்த இருப்ப தாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே உள்ள நில வரியைக் கட்ட முடியாமல், பல கிராமங்களில் கிராம முன்சிப்கள் ஏழை விவசாயிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து வரி வசூலிக்கிற அளவுக்கு இருக்கின்ற நிலைமையில் அதுவும் குறிப்பாக பஞ்சா யத்து யூனியன்கள் வேறு surcharge என்ற பெயரில் சுமார் 29 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரையில் வரி விதித்திருக்கிறார் கள், இந்த நிலைமையில் மேலும் நில வரியை உயர்த்துவது மக்களைப் பாதிப்பதாக இருக்கிறது. 4-50 p.m.

அடுத்து, மின்சாரக் கட்டணம், லோடென்ஷன் (low tension) மின்சார உபயோகத்தின் மீது 10 சதவீதம் வரி விதிக்க இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்கள். வீட்டில் எரியக்கூடிய மின்சாரத்துக்குக் கட்டணத்தை உயர்த்துவதால், அதனால் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஏழை மக்களாகவே இருப்பார்கள். ஆக பல காரணங்களால் பொது மக்களை வாட்டி வதைக்கிற அளவுக்கு புதிய வரிகள் விதிக்கப்படுவதை நான் வன்மையாகக் கண்டிக்க முற்பட்டிருக்கிறேன். தவிரவும் நம்முடைய அமைச்ச ரவர்கள், திட்டங்கள் நிறைவேற்றப்படும் காலத்தில் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய தொகையை அதிகமாகப் பெறாத காரணத்தால் தான், திட்டம் நிறைவேறுவதற்குப் பணமில்லை என்று புதிய வரிகளை விதிக்க முற்பட்டிருக்கிறார். ஏற்கனவே பல அங்கத்தினர்கள் சபையில் கூறியிருப்பதுபோல, மத்திய அரசிட மிருந்து பெற வேண்டிய மான்யங்களை இந்த மாநில அரசு பெறத் தவறிவிட்டது. அந்த வகையில், இனியாவது நம்முடைய திட் டங்கள் பூராவுக்கும் அதிகத் தொகை ஒதுக்க, மத்திய அரசுடன் போராடி நிதி வசதி பெற நமது நிதியமைச்சரவர்கள் முன் வருவார்கள் என்று நினைக்கிறேன். நமது முன்னாள் நிதியமைச்சர வர்கள் ஒருக்கால் மத்திய அரசுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் பயந்தோ, அல்லது வேறு பல காரணங்களாலோ, போராடி நிதி வசதி பெற தவறி இருந்தாலும், தற்போதைய நிதியமைச் சரவர்கள் மத்திய அரசோடு போராடி அதிக நிதி வசதியைப் பெறவேண்டுமென்று அவரை இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்திலேயே மிகவும் பிற்போக்கானதும, பெரிய மாவட்டமுமான சேலம் மாவட்டம் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. ஹோசூர் தாலுகா பல காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்து வந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதன் காரணமாக அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் அடுத்துள்ள மாநிலங்களான ஆந்திரத்துடனே, கர்னுடகத்துடனே சேர்ந்துவிடவேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருப்பதும், அமைச்சரவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே ஹோசூர் வட்டத்தைப் பொருத்த வரையில் அதன் முன்னேற்றத்திற்கான சில ஆக்கப் பணிகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்று சேலம் மாவட்டம் பூராவுக்கும் இருக்கிற கல்லூரி ஒரே ஒரு கல்லூரிதான். சென்ற ஆண்டிலே திரு. ரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டது போல, பல உயர்நிலைப்பள்ளிகளை அரசாங்கம் துவக்கியிருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளி திறந்தால் மட்டும் போதாது, உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு கல்லூரிக்கு வரும் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கல்லூரிகள் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது விஷயமாக இதில் ஒன்றும் குறிப்பிடாதது நமக்கு வருத்தம் கொடுப்பதாக இருக்கிறது. கல்லூரிகள் அதிகமாக நமது மாநிலத்தில் திறக்கப்பட்டால் தான் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து வெளியே வரும் மாணவர்களுக்கு வசதி செய்துகொடுத்தவர்களாக இருப்போம். இப்போது கல்லூரிகளில் இடம் கிடைக்காத காரணத்தால், மாணவர்களும் அவர்கள் பெற்றோரும் எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். இந்த அளவில் கல்லூரிகள் குறைவாக இருக்கின்றன. மேலும் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்போது வட சேலத்தில் கிருஷ்ணகிரியில் ஒரு கலைக்கல்லூரியும் ஒரு பாலிடெக்னிக்கும் ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் ஓசூரில் ஒரு மிஷின் டூல்ஸ் செய்யக்கூடிய தொழிற்சாலையும் கிருஷ்ணகிரியில் ஒரு தொழிற்பேட்டையும் விரைவில் ஏற்படுத்தப்படவேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஈராண்டு முடிந்துவிட்டது. இந்த ஆண்டிலாவது மேற்சொன்ன இரண்டு வேலைகளையும் துவக்க ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணகிரியைப் பொறுத்த வரையில் அங்கு எல்லா வசதிகளும் இருக்கிற காரணத்தால், வட சேலம் பிரிக்கப்படுகிற நேரத்தில், சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது வடசேலம் மாவட்டத்திற்குக் கிருஷ்ணகிரியைத் தலைநகராகத் தேர்ந்தெடுக்க அமைச்சரவையில் முடிவெடுத்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதற்காக கிருஷ்ணகிரி வாழ் மக்கள் அனைவரின் சார்பாக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் தர்மபுரியைத்

3rd July 1962] [திரு. ஆர். வெங்கடாசலம்]

தலைநகராக ஆக்கவேண்டுமென்று பத்திரிகையில் பார்த்தேன். அதற்காக கிருஷ்ணகிரி வாழ் மக்களுக்கும் மையமாகவும், அதிக மான கட்டிட வசதி உள்ளதாயும், சீதோஷ்ண நிலை மிகவும் நல்ல முறையிலும் இருக்கக்கூடிய கிருஷ்ணகிரியை வடசேலம் மாவட்டத்தின் தலைநகராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திட்டங்கள் போடும்போது, ஏழை மக்களைப் பாதிக்கும் வகையில் விதிக்கப்படும் வரிகளை நீக்கி மத்திய அரசிடமிருந்து பெறும் மானியங்களை அதிகப்படுத்தி அத்திட்டங்களை நிறை வேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வரிவிதிப்புகளை என்னால் ஆமோதிக்க முடியவில்லை என்று கூறி இதுவரை எனக்குப் பேச அனுமதி அளித்த உப தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **வித்துவான் டி. முத்துக்கண்ணப்பன்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, 1962-63-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஒட்டி அதை வரவேற்றுச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். இந்த அறிக்கையை நன்றாக ஒருமுறை பார்த்தால், அறிவும் ஆற்றலும் திறமையும் வாய்ந்த பேரமைச்சரால் தயாரிக் கப்பட்டது இது என்பது மிக நன்றாக விளங்குகிறது. அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்றுதான் சொல்ல வேண்டும். கல்வித் துறைக்காக கிட்டத்தட்ட மூன்றாவது ஐந்தாண்டுத் கல்வித் துறைக்காக மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் கிட்டத் தட்ட 25½ கோடி ரூபாய் செலவிடப்படும். இதில் 1961-62 இருக்கிறது. இதில் நான் அடிக்கடி இந்த மதிப்பிற்குரிய, சிறப்பு வாய்ந்த மன்றத்தில் கூறி வந்திருக்கிறேன், இரண்டு கல்வி நிலைகள் அனேகமாக கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்று. ஒன்று குழந்தைகளுக்கான கல்வி, மற்றொன்று வயதுவந்தோர் கல்வி. குழந்தைக் கல்வி இந்த ஆண்டிலிருந்து மிக மும்முரமாக மேற் கொள்ளப்பட்டு நல்ல முறையில் வந்துகொண்டிருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரிய செய்தி. அடுத்ததாக வயதுவந்தோர் கல்வி மீது போதிய கவனம் இன்னும் செலுத்தவில்லை என்றுதான் நான் கூற முடியும். வயது வந்தோர் கல்வி மிகமிக முக்கியமானது. இப்போது வயதுவந்தோர் வாக்காளர்களாக இருக்கிறார்கள். நாடாளும் மன்னர்களாக அவர்கள் இருக்கிறார்கள். படிப்பில்லாத வர்கள் வாக்காளர்களாக இருப்பதால்தான் அரசியல் ஜால வித்தைக்காரர்கள் எளிதில் அவர்களை ஏமாற்ற முடிகிறது. அவர்கள் எல்லாம் நல்ல கல்வி அறிவு பெற்றவர்களாக ஆகி விட்டால் இந்த ஜாலவித்தையெல்லாம் அவர்களிடத்தில் பலிக் காது. ஆகையால் உடனடியாக வயது வந்தோருக்கெல்லாம் கல்வி அளிக்க வேண்டியது இன்றியமையாத கடமை என்று தெரி வித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். வயது வந்தோருக்கு இப்போது அளிக்கப்படும் கல்வி நல்ல முறையில் இல்லையென்று அத்துறையில் சற்று அனுபவம் வாய்ந்த நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்து ஆசிரியர் பயிற்சி அளிக்கிறார்கள். அவர்கள்

ஏற்கெனவே ஆசிரியர்களாக இருந்தவர்கள். பகல் முழுவதும் ஆசிரியர்களாகப் பணியாற்றிவிட்டு அவர்களே திரும்பவும் சென்று இரவுப்பள்ளிகளில் வயது வந்தோருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றால் அது அவர்களைச் சித்தரவதை செய்வதைப் போலாகும். பகல் முழுவதும் உழைத்துவிட்டு இரவிலும் கற்றுக் கொடுக்கவேண்டுமா? அந்த நேரத்தில் அவர்கள் இரண்டு மூன்று டுஷன்கள் எடுத்தாலும் ரூ. 50, 60 வரும் என்று தான் நினைப் பார்கள். இதில் போதுமான பணம் வராது. அதோடு முப்பது நாற்பது பேருக்குக் கற்றுக் கொடுப்பது மிகச் சிரமமானது. இதற்கு நான் கூறும் முறையைக் கையாண்டால் நன்றாக இருக்கு மென்று கருதுகிறேன். அதாவது பகலில் பணி செய்யும் ஆசிரியர் கள் காலை, முற்பகல்வரை பள்ளியில் வேலை பார்க்கவேண்டும். பிற்பகலில் வேலையில்லாமல் இரவு நேரத்தில் முதியோர் கல்வியில் ஈடுபடவேண்டும். அதோடு வயதுவந்தோர் கல்வி அறிவு பெற்ற வர்களாகிவிட்டால் அவர்களுக்கு ரூ. 20 பரிசு கொடுப்பது என்பன போன்ற ஒரு நிலையை மேற்கொள்ளலாம். தொழிற்சாலைகளில், பாக்டரிகளில் வேலை செய்கிறவர்கள் படிப்பு இல்லாதவர்களாக இருந்து கல்வி அறிவு பெற்றவர்களாக ஆகிவிட்டால் சம்பளத்தில் ரூபாய்க்கு ஐந்து நயாபைசா உயர்வு என்று செய்தால் கல்வி அறிவு இல்லாதவர்கள் ஒரு சில ஆண்டிற்குள் கல்வி அறிவு பெற்ற வர்களாகி விடுவார்கள். ஆகையால் இது மிகவும் அவசியமானது. இதில் அரசாங்கம் அதிகமான கவனம் செலுத்தவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கல்வி முறையில் புதுத்திருப்பம் வந்திருக்கிறது. பத்து ஆண்டுகள் முதல் நிலை, இரண்டாண்டு இடை நிலை, மூன்று ஆண்டு கல்லூரி நிலை. இது எல்லோராலும் புகழ்ந்து பாராட்டக் கூடிய நிலையாக இருக்கிறது. இந்த ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் வெளியிட்டதால் பலரின் பெருமதிப்பை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அது அதிகமாகாது. பள்ளிகளில் மத, நீதி போதனை இல்லாமல் இருப்பது ஒரு பெரும் குறை. மத போதனை மிகவும் அவசியம். நீதி போதனையும் அவசியம். நம்முடைய நாட்டிலுள்ள பல மதங்களுடைய சாரங் களையும் திரட்டிக் குழந்தைகளுக்குச் சொல்லவேண்டும். எந்த மதத்திற்கும் விருப்பு வெறுப்பின்றி மத போதனை அளிக்கப்பட வேண்டும். நீதி போதனை அளிக்கப்படவேண்டும். பிஞ்சு உள்ளங் களில் எல்லாம் மத போதனை நன்கு பாவினால் இப்போதிருப் பதைப் போல அரசியல் சகதியில் சிக்கி நாத்திக வாதிகளாகப் போகாமல் நல்லமுறையில் அறநெறியில் செல்ல அது பயன்படும்.

5 00½ p.m. இன்றைக்கு அரசாங்க அலுவல்களில் பணி செய்பவர்கள் ஓய்வு பெறுவதைப் பற்றி நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஓய்வு கால வரம்பு 55 வயது என்று சாதாரணமாக இப்போது இருக் கிறது. சில இடங்களில் அதற்கு மேலும் கூட போகிறது என்று நினைக்கிறேன். 55 வயதான உடனேயே அவர்களை நீக்கிவிட வேண்டும். **Superannated employees** இருக்கக்கூடாது. வேண்டு மானால் ஓய்வு வயதை 60 ஆக்கி விடுங்கள். ஒரு வயது வரம்பைக் குறித்துவிட்டுப் பின் ஆண்டுதோறும் அவர்கள் பதவிக்காலத்தை

3rd July 1962] [வித்துவான் டி. முத்துக்கண்ணப்பன்]

உயர்த்திக்கொண்டே போவது கூடாது. அப்படி செய்தால் பின்னல் அப்பதவிக்கு வர இருப்பவர்கள் வாய்ப்பில்லாமல் பாதிக்கப்படுகிருர்கள். அவர்கள் இருப்பது இன்றியமையாத தாக இருந்தால் அவர்களுக்கு துவக்கத்தில் பெற்ற சம்பளத்தைக் கொடுக்கலாம். இது மிக முக்கியமானது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சார உற்பத்தி இப்போது குறைந்திருக்கிறது. விநியோகம் குறைந்து வருகிறது. நான் பல மாதங்களாக, பல ஆண்டுகளாகப் பார்த்து வருகிறேன். அரசாங்க அலுவலகங்களில் எப்போது பார்த்தாலும் விளக்கு எரிந்துகொண்டே இருக்கிறது. மின் விசிறிகள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. அலுவலாளர் உள்ளே இருக்கிருரா என்று பார்த்தால் அங்கு ஒருவரும் இருப்பதில்லை ஒருவரும் இல்லாமல் மின்சாரம் வீணுகிக்கொண்டே இருக்கிறது. சாதாரணமாக நம் வீடுகளில் வேண்டுகின்றபோது விளக்கைப் போட்டு வேண்டாதபோது நிறுத்திவிடுவது போன்ற ஒரு பொறுப் புணர்ச்சி கொஞ்சமாவது அரசாங்க அலுவலில் உள்ளவர்களுக்கும் வேண்டும்.

மீன் துறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இங்கில்லை. கனம் மன்ருடியார் அவர்கள் இந்தத் துறையை மேற்கொண்டிருக் கிருர்கள். அவர் பெரிய கைராசிக்காரர் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அவர் பதவி ஏற்ற நேரத்தில் நல்ல திட்டங்கள் மீனவர்களுக்கான வசதிகள், குளிர்ப்பதனங்கள், மீனவர் பயிற்சிப் பள்ளிகள், கப்பல் கட்டும் தளங்கள் எல்லாம் ஏற்படுகின்ற வாய்ப்பு கிடைத்துள்ளது. ஒரே ஒரு இடத்தில் முக்கியமான இடத்தில் போதுமான உதவி கிடைக்கவில்லை என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். அது மீனவர்கள் கல்வி நிலையில் தான். மீனவர் இனம் மிகப் பிற்பட்டவர்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதில் 52 ஜாதிகள் சேர்க்கப்பட்டிருக் கின்றன. அந்தக் கும்பலில் இவர்களும் சேர்க்கப்பட்டிருப்பதால், இவர்களுக்கு உரிய சலுகைகள் கிடைக்கவில்லை. 'கவர்ன்மெண்ட் ஆர்டர்' ஒன்று பாஸ் செய்திருக்கிருர்கள். மீனவர்களை ஹரிஜனங்கள் போல் பொருளாதாரத்தில் தாழ்ந்தவர்கள் (Economically Backward) என்று ஒத்துக்கொள்கிருர்கள். 1956-ல் ஒரு ஜி.ஓ. 'பாஸ்' செய்திருக்கிருர்கள். மருத்துவர், வண்ணூர் இரண்டு இனத்து மாணவர்களுக்குக் கல்லூரிப் படிப்புக்கு வரும்போது உணவு, பள்ளிச் செலவு இவைகளுக்கு எல்லாம் அரிஜன மாணவர்களுக்குக் கொடுப்பதுபோலப் பணவுதவி கொடுக்க உத்தரவாயிருக்கிறது. மகிழ்ச்சியடைகிறேன். அதே சலுகையை மிகமிகப் பிற்பட்டிருக்கும் மீனவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மீனவர்கள் மீன்களை அதிகமாகப் பிடிக்க வேண்டுமென்று முயற்சித்தாலும் அவற்ருலெல்லாம் அவர்கள் உயர்ந்த நிலைக்கு வரமுடியாது. போதிய கல்விச் சலுகை அளிப்பதால்தான் முன்னேற முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[வித்துவான் டி. முத்துக்கண்ணப்பன்] [3rd July 1962

உப்பளங்களில் இப்போது உப்பெடுத்து நீங்கிய திரவத்திலிருந்து பொட்டாசியம் குளோரைடு, பிரோமைடு போன்றவைகள் எல்லாம் எடுக்கப் போகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, கேளம்பாக்கம், கோவளம், பழவேற்காடு போன்ற இடங்களில் உப்பு எடுக்கப்படுகிறது. அங்கேயும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

வைத்திய வசதி பற்றி ஒரு சில வார்த்தைகள். இந்த மன்றத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்கு வைத்திய வசதிகள் அளிக்காமலிருப்பது ஒரு குறைபாடு என்றுதான் சொல்வேன். ஆஸ்பத்திரியில் நாங்கள் Inpatient ஆக இருந்தால் எங்களை யாராவது பார்க்க வேண்டுமானால் கூட மிகுந்த சங்கடமாக இருக்கிறது. இந்த நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக்காக ஓயாமல் உழைக்கும் அங்கத்தினர்கள் நலம் குன்றி வைத்திய சாலைக்குச் சென்றால், அவர்களுக்குத் தனி அறைகள் (Special ward) கொடுத்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மருத்துவத்துறை பற்றிச் சொல்லும்போது அம்மையார் அவர்கள் மிக நன்றாகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தக் குறைபாடுகளை அவரிடத்தில் நேரில் சொல்லியிருக்கிறேன். இதிலே அதிகமாக குணப்படுத்தும் துறையில் curative side-ல் கவனம் செலுத்துகிறார்கள். preventive side-ல்—தடுப்பு முறையில்—அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நோய் வந்தபின் வைத்தியம் செய்வதைவிட, வராமல் தடுக்கும் முறையில் அதிக கவனம் செலுத்துவது மிக முக்கியம். இதில் முக்கியமானவர்கள் சுகாதார ஆய்வாளர்கள் (Health Inspectors) அவர்களுடைய ஊதியமும், நிலையும் உயர வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கம் வரை மருத்துவத் துறையை மேற்கொண்டிருப்பவர்கள் பெண்மணிகளாக இருக்கிறார்கள். மத்திய அரசாங்க மருத்துவத் துறையில் ஒரு அம்மையார்; மாநில மருத்துவத் துறை பொறுப்பேற்றுள்ள அமைச்சர், அம்மையார். இப்போது மருத்துவத் துறை—டைரக்டர் (Director of Medical Services) ஒரு அம்மையாராக இருக்கிறார்கள். சுகாதார இலாகா டைரக்டர்—(Director of Public Health) கூட அடுத்து வருபவர் ஒரு அம்மையாராக இருந்தால் நல்லது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நாட்டுப் பிரிவினை இயக்கத்திற்கு ஒரு சாரார் வித்திட முனைந்திருக்கிறார்கள்.

ஸ்ரீ க. அன்பழகன் : அது ரொம்ப நாளாக இருக்கிறது.

வித்துவான் டி. முத்துக்கண்ணப்பன் : அவர்கள் நீண்ட நாளாக இருப்பதாகக் கனவு கண்டிருக்கலாம். பரந்த மனப்பான்மைக்கும், பண்பாட்டுக்கும் பெயர்போன நாடு தமிழகம். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற சிறப்பு பெற்ற நாடு. இந்த விஷ வித்து

3rd July 1962] [வித்துவான் டி. முத்துக்கண்ணப்பன்]

தமிழகத்திலிருந்து இடப்படுகிறது என்றால் இது தமிழகத்தின் தவக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும் தொண்டை மண்டலத்தை சார்ந்த-எங்களது செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த-ஒருவர் அந்த இயக்கத்திற்குத் தலைவராக இருக்கிறார் என்பதைப் பார்க்க வெட்கமாக இருக்கிறது. வருத்த மாகவும் இருக்கிறது. அது உண்மையில் சொல்லப்போனால் வெறும் பகற் கனவு. அவர்களுக்கே தெரியும் இது வெறும் வேஷம் என்று. அந்த வேஷத்தில் மக்களை ஏமாற்ற முடியுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். இப்போது புரிந்துகொள்ளவில்லை என்றால், பிறகாவது புரிந்து கொள்வார்கள். ஏமாறுவதற்கு ஆள் இருக்கும் வரை ஏமாற்றலாம். ஏமாற ஆள் இல்லாத நிலை சீக்கிரம் வந்துவிடும்.

நான் தமிழின் பெயரால் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்— இந்த வேஷத்தைக் களைந்துவிட்டு ஆக்கப் பணியில் ஈடுபட்டு, நாட்டைச் சிறந்த நாடாக்க முன் வாருங்கள் என்று நான் அவர்களை அழைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தின் சரித்திரக் கண் கொண்டு பார்த்தாலும் இலக்கியக் கண் கொண்டு பார்த்தாலும் சங்க இலக்கியங்களைப் புரட்டினாலும் ஆயிரம், இரண்டாயிரம் வருடங்கட்கு முன்பு தமிழ் நாட்டில் . . .

ஸ்ரீ ஆர். வெங்கடாசலம்: இலக்கியத்தில் இந்தியா ஒரே நாடு என்று இல்லை.

வித்துவான் டி. முத்துக்கண்ணப்பன்: அந்தக் காரணத்தைத் தான் சொல்லப்போகிறேன். முப்பெரு மன்னர்கள் ஆண்டார்கள். தமிழ் மன்னர்கள் ஆண்ட பெருநாடு என்று பெருமைப்படுகிறோம். உண்மையில் பெருமைப்படத்தான் வேண்டும். அதே சமயத்தில் மக்கள் நீடித்த அமைதியான, நிலையான வாழ்வை அடைய முடியாமல் இருந்தார்கள். பல காலங்களில் சேரன், சோழனை எதிர்த்து வெல்லப் பார்ப்பது, சோழன் பாண்டியனை எதிர்த்து— இப்படி ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இப்படி யெல்லாம் இருந்திருக்கிறது. இங்குமங்கும் குறுநில மன்னர்கள் ஆண்டார்கள். அப்போதெல்லாம் போர், படையெடுப்பு பீதி மக்களை வாட்டி வந்தது. பிறகு மகமதியர்கள், ஆங்கிலேயர்கள் படையெடுப்பு. இதனால் நாடு யுத்த பீதியில் ஆழ்ந்து வேதனை அடைந்தது. நாடு பல பகுதிகளாகி மன்னர்கள் ஒருவரை யொருவர் யுத்த வெறி கொண்டு தாக்கிக்கொண்டதால் நிலைத்த இன்பம் இல்லை. அமைதி இல்லை. மக்கள் பயமின்றி வாழ முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆங்கிலேயப் பேரரசு வந்தது. ஆங்கிலேயருடைய ஆட்சியில் தான் முதன் முறையாகக் கிட்டத்தட்ட இந்நாடு முழுவதும் ஓராட்சியில் இருந்தது. கொஞ்சம் அமைதி ஏற்பட்டது. ஆனால் அந்த அமைதி அடிமைத் தளையில் இருந்தபோது அதை அமைதியாக ஏற்றுக்கொள்ள முடியுமா? மக்களைப் புழு, பூச்சிகளாக நினைத்து

அடிமைப்படுத்தி வாழ்ந்த அந்த ஆங்கிலேயருடைய ஆட்சியில் ஏற்பட்ட அமைதியை அமைதி என்று சொல்ல முடியாது. அடிமைத் தளையில் இருப்பவர்களுக்கு ஏற்படும் அமைதியும் ஒரு அமைதியா ?

ஸ்ரீ ஆர். வெங்கடாசலம் : ஆங்கிலேயன் காலத்தில் தான் நாடு ஒன்றுக்கப்பட்டது.

வித்துவான் டி. முத்துக்கண்ணப்பன் : ஆமாம். ஆனல் சுதந்திரம் வந்தபின், நீடித்த அமைதி ஏற்பட்டுள்ளது. திட்டம் போட்டு முன்னேறுவதால் தான் மக்கள் எத்தகைய ஆபத்தும் இல்லாமல் ஒரே நாட்டின் குழந்தைகள் என்ற ஒரே எண்ணத்துடன் சுகமாக, அமைதியாக வாழ வேண்டுமென்று முனைந்து வருகிருர்கள். அதிலே வந்து இடையில் விஷ வித்திட முனைவது தமிழர்களுக்கு உரிய காரியம் அல்ல. எனவே இது உண்மையில் வருந்தத்தக்க நிலை. இந்தப் பிரிவினைப் பேச்சை அவர்கள் மறந்துவிட வேண்டும். இந்தப் பகற் கனவு நிலையை விட்டுவிட வேண்டும். இந்த நாட்டின் ஆக்க வேலைக்கு அவர்களுடைய ஆற்றல்களையெல்லாம் செலவு செய்து உழைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 137. *Notification issued with G.O. Ms. No. 744, Home, dated 20th February 1962, directing that quarterly tax be collected in respect of the luxury coach bearing registration No. MDU 7463 belonging to the Kodaikanal Motor Union (Private), Limited Madurai, at the rate of Rs. 10 per seat provided in the vehicle so long as the said vehicle is used for tourist purposes.*

*138. *Notification issued with G.O. No. 562, Public (General-M) Department, dated 20th March 1962, directing that Tamil shall be used in respect of all official communications from all the Government offices for the time-being in existence falling under the categories specified therein in the Industries and Commerce Department.*

* 139. *Notification issued with G.O. Ms. No. 1501, Industries, Labour and Co-operation (Labour), dated 13th March 1962, regarding amendments to the Madras Catering Establishments Rules, 1959.*

* 140. *Notification issued with G.O. Ms. No. 570, Home, dated 8th February 1962 exempting the station wagon bearing registration No. MDE 3956 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Coimbatore, from the payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).*


3rd July 1962]

* 141. *Notification issued with G.O. Ms. No.* 1199, *Home, dated* 24*th March* 1962, *exempting the Willys Station wagons bearing registration numbers MDE* 4751 *and MDE* 4281 *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to District Medical Officer, Coimbatore, from payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).

*142. *Notification issued with G.O. Ms. No.* 1054, *Food and Agriculture, dated* 15*th March* 1962, *notifying the market areas Ramanathapuram Market Committee for the purposes of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act XXIII of* 1959) *in respect of cotton and groundnut.*

* 143. *Notification issued with G.O. Ms. No.* 1055, *Food and Agriculture, dated* 15*th March* 1962 *notifying the market areas to the Coimbatore Market Committee for the purposes of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act XXIII of* 1959) *in respect of cotton, tobacco and groundnut.*

* Laid on the table of the House on 30th June 1962.



[3rd July 1962

APPENDIX

[Vide answer to starred question No. 76 on page 177]

G. O. No. 1505, Finance, dated 15th December 1961.

National Savings—Pay Roll Saving Scheme—Introduction in Government Offices—Orders—Passed.

In order to facilitate the expansion and intensification of the Savings movement and the creation of savings consciousness amongst the employees in Government offices, the Government have had under consideration proposals for the introduction of the Pay Roll Savings Scheme which is a voluntary arrangement between the employee and the employer for deduction of a specified amount from the employee's monthly salary for investment regularly in one or other of the Small Savings Securities.

2. The Government have decided to permit the introduction of the Pay Roll Savings Scheme, details of which are given in the following paragraph, in offices where there is a reasonable demand from the staff and where the Heads of offices are willing to take up the responsibility without additional staff. No remuneration will be paid to the staff entrusted with this work.

3. The following are the details of the scheme :—

(i) A Savings Committee composed of officers and subordinates in each office shall be formed. The Committee shall appoint a Group Leader.

(ii) An authorization in Form I indicating the amount to be deducted from the salary and the kind of security in which it is to be invested shall be given by the employee concerned to the Head of office. This authorization is revokable and modifiable at any time by the employee.

(iii) A Control Register in Form II shall be opened, which should contain the names of all employees who have given their consent, in writing, for the deduction from their salary. The register should be maintained by the Head of office with the help of one of the clerks.

(iv) The pay disbursing clerk will make regular deductions from the salary of the employees on the basis of the authorization in Form I at the time of disbursement and he should prepare a Deduction Sheet in Form III. The Deduction Sheet will not indicate the names of employees who have not received their pay on that day. A Deduction Sheet should be used for one month only. The names of employees should be written in the order of the dates of disbursements of pay.

(v) The pay disbursing clerk shall then hand over the Deduction Sheet and the entire amount to the Group Leader after obtaining a simple receipt from him. The latter will deposit the respective amounts in the Post Office or purchase the certificates, as the case may be. On return of the pass books, he will show to

3rd July 1962]

each member the relevant entries made by the Post Office concerning his deposits and obtain the signature with date in columns 11 and 12 of the Deduction Sheet. He will also hand over the certificates to the persons concerned and obtain their acknowledgments in the same columns. Simultaneously, he should fill in columns 9 and 10 of the Deduction Sheet. If the amounts are received from the pay disbursing clerk at the close of hours of business of Post Office and cannot be remitted into the Post Office on the same day, such amounts shall be in the custody of the person who is authorized to handle cash in the office concerned. A register in Form IV shall be maintained for this purpose. The Deduction Sheet should then be returned to the pay disbursing clerk and the pass books to the Head of office.

(vi) After the Deduction Sheet is received from the Group Leader, the pay disbursing clerk should submit it to the Head of office together with the Pay Acquittance Register so that the latter may verify with reference to the Control Register whether the deductions have been made in the case of all employees who have given their consent and whether the moneys have been duly invested in the Post Office or utilized for the purchase of certificates. The Head of office should make sure that the acknowledgment of the investor finds a place in columns 10 and 11 against each entry. He should then fill in the columns in the Control Register showing the particulars of deduction and attest the entries.

(vii) The Pass Books should be in the custody of the Head of office and they should be accounted for in a separate register in Form V.

4. The Heads of Departments are requested to submit a report to Government during the first week of February 1962, indicating the various offices in which the scheme has been introduced with the consent of the Heads of office. The Departments of Secretariat are also requested to send a similar report relating to their Departments.

(By order of the Governor)

T. A. Varghese,
Secretary to Government.

[3rd July 1962

FORM I.

AUTHORISATION.

Place :

Date :

To

Sir,

I hereby authorize you to deduct every month from my salary a sum of Rs.........(rupees............only) and to remit the amount as under :—

(*a*) Rs.........for credit to my Post Office Savings Bank Account No.......

(*b*) Rs.........for credit to my Cumulative Time Deposit Account No........

(*c*) Rs.........for purchase of 12-Year National Plan Savings Certificates.

(*d*) Rs.........for the purchase of 10-Year Treasury Savings Deposit Certificates.

This authority will remain in force until it is modified or revoked by me in writing.

Yours faithfully,

(Signature)

Name..............

Full address.................
(in block letters.)

FORM II.

CONTROL REGISTER.

Serial number.	Name and designation of employee.	Number and date of consent letter.
(1)	(2)	(3)

Particulars of deduction.

January.		February.		March.		April, etc.	
Amount.	Date.	Amount.	Date.	Amount.	Date.	Amount.	Date.
(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
RS.		RS.		RS.		RS.	

3rd July 1962]

FORM III.

DEDUCTION SHEET.

Serial number.	Name of employee.	Designation.	Number and date of authorisation.	Monthly deduction.	Date of deduction.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

Amount deducted.	Initials of Pay Disbursing Clerk.	Date of purchase of certificates or investment in Pass Books.	Distinctive number of certificates.	Receipt by Investor	
				Signature.	Date.
(7)	(8)	(9)	(10)	(11)	(12)
RS.					

FORM IV.

CASH REGISTER.

Date.	Amount received.	Initials of the Cashier.	Date.	Amount returned.	Initials of the Group Leader.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	RS.			RS.	

FORM V.

PASS BOOK REGISTER.

Serial number.	Name and designation of the member.	Pass Book number.	Date and initial of Head of office.	Receipt of Pass Book by Group Leader (dated signature).	Date of return by Group Leader.	Receipt of Pass Book by member (dated signature).	Date of return by member.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS